**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.38/2020
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : சண்முகவேல் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of October 2024.

23.10.2024

(எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக எனக்கு தேதி, மாதம் நினைவில் இல்லை ராமமூர்த்தியும் கண்ணுச்சாமியும் ஒரு தரப்பினராகவும், சித்திரைவேலும் கிருஷ்ணனும் ஒரு தரப்பினராகவும் சண்டை நடந்தது. சண்டை முடிந்த பின்புதான் நான் வந்தேன். இரவு 10.00 மணியளவில் ஆம்புலன்ஸ் வந்தது. காயம்பட்ட நபர்களை மருத்தவமனைக்கு அனுப்பினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 29.04.2019 ம் தேதி இரவு 09.35 மணியளவில் அ.சா.1 ராமசாமியை எதிரிகள்

சுன்னி மகனே என்று அசிங்கமாக திட்டினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது லெட்சுமி மற்றும் சித்திரைவேல் ஆகியோர் சண்டையை விலக்கும்போது எதிரிகள் லெட்சுமியை கம்பால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது எதிரிகள் அ.சா.1 யை கொல்லாமல் விடமாட்டேன் என்றால் சரியல்ல.

2. கீழத்தூவல் போலிசாரிடம் சம்பவத்தை நேரில் பார்த்தாக வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுடன் செய்துகொண்ட சமாதானத்தால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.